# வீட்டுப் பராமரிப்புச் சேவைகளுக்காகஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்

PICAC NT
Partners in Culturally Appropriate Care



Tamil/ தமிழ்

**ஒரு வீட்டு பராமரிப்புப் பொதி (Home Care Package) உங்களுக்கு தேவையான சேவைகள் மற்றும் ஆதரவு பெறுவதை உறுதி செய்ய முடியும்.** வீட்டு பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக ஒரு சேவை வழங்குனருடன் நீங்கள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்னர், உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

1. உங்கள் உரிமைகளைப் புரிந்துகொள்ளுங்கள்[1].
2. உங்கள் வீட்டுப் பராமரிப்பு வழங்குநரால் உங்கள் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
3. உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருப்பின், அது பற்றி உங்கள் வழங்குநரிடம் பேசுங்கள்.
4. நீங்கள் தேர்ந்தெடுக்கும் வீட்டு பராமரிப்பு வழங்குனர் தொடர்பாக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய சில பொறுப்புகள் உள்ளன.
5. மரியாதையுடனும் அக்கறையுடனும் இருங்கள்.
6. உங்களுக்கு உதவுவதற்காக வழங்குநர்களுக்கும் அவர்களின் ஊழியர்களுக்கும் ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்கவும்.
7. உங்கள் உடல்நிலையில் மாற்றம் ஏற்படின், உங்கள் வீட்டுப் பராமரிப்புப் பொதியில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தயாராக இருங்கள்.
8. உங்கள் வழங்குனருடன் ஒப்புக்கொண்டபடி உங்கள் வீட்டு பராமரிப்பு கட்டணத்தை செலுத்துங்கள்.

[1] Home Care Packages Program Manual for Care Recipients, version (பராமரிப்புப் பெறுபவர்களுக்கான வீட்டு பராமரிப்புப் பொதிகள் திட்ட கையேடு, பதிப்பு) 1.4 , ஜனவரி 2023

PICAC NT
Partners in Culturally Appropriate Care

# வீட்டுப் பராமரிப்புச் சேவைகளுக்காகஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்

## நீங்கள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னர்

**எந்தவொர் ஒப்பந்தமும் கையெழுத்திடப்படுவதற்கு *முன்னர்* உங்களுக்கு உரிமைகள் உள்ளன. நீங்கள் கையெழுத்திட ஒப்பந்தம் பற்றிய தெளிவான புரிதல் உங்களுக்கு இருக்க வேண்டும்**

### சரிபார்க்க வேண்டிய விடையங்கள்

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1. | *எளிய, கடினமான கலைச் சொற்கள் அற்ற ஆங்கில மொழியில் ஒப்பந்தத்தின் நகல், துண்டுப்பிரசுரம் மற்றும் வழங்கப்படும் சேவைகள் பற்றிய சிற்றேடு ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டீர்களா?* | ☐ | ☐ |
| 2. | *உங்கள் சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்களையும் தமிழ் மொழியில் பெற்றீர்களா?* | ☐ | ☐ |
| 3. | *கையொப்பமிடுவதற்கான சந்திப்பின் முன் குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு முன்னராவது ஒப்பந்தத்தின் நகலை (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டிலும்) பெற்றீர்களா? ** | ☐ | ☐ |
| 4. | *ஒப்பந்தத்தில் நீங்கள் கையொப்பமிடும்போது சேவை வழங்குநரிடமிருந்து வழங்கப்படும் சேவைகளின் தெளிவான பட்டியல் உள்ளதா?* | ☐ | ☐ |
| 5. | *உங்கள் வீட்டு பராமரிப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் சேவை வழங்குநரால் வழங்கப்படக்கூடிய அனைத்து சாத்தியமான* (Home Care) *சேவைகளையும் ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளதா, (தற்போது நீங்கள் அவற்றில் ஆர்வம் காட்டாவிட்டாலும் கூட)?* | ☐ | ☐ |
| 6. | *கட்டணம் செலுத்துவதற்கான உங்களின் விருப்பமான முறையை (நேரடிப் வங்கிப் பற்று,* Centrelink *கொடுப்பனவில் கழித்தல் அல்லது மாதாந்த பணப்பரிமாற்றம் போன்றவற்றை) கருத்தில் கொண்டீர்களா?* | ☐ | ☐ |
| 7. | *சேவை வழங்குநருடனான உரையாடல்களின் போது மொழிபெயர்ப்பிற்காக, குடும்ப உறுப்பினர்களைத் தவிர்த்து, ஒரு தொழில்முறை மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு வழங்கப்பட்டதா?** | ☐ | ☐ |
| 8. | *சேவை வழங்குநருடன் ஒப்பந்தத்தை மதிப்பாய்வு செய்வதுடன் உங்கள் எல்லா கேள்விகளுக்கும் பதில்களைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு நேரம் கிடைத்ததா?* | ☐ | ☐ |
| 9. | *ஆங்கிலத்தைத் தவிர, தமிழ் மொழியில் முதியோர் பராமரிப்பு உரிமைகளுக்கான சாசனத்தின்* (Charter of Aged Care Rights) *நகல் கிடைத்ததா?* | ☐ | ☐ |

**இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றுக்கு நீங்கள் 'இல்லை' என்று பதிலளித்திருந்தால், மேலும் தகவலுக்கு உங்கள் சேவை வழங்குநரிடம் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.** COTA NT Aged Care Navigators (08 8941 1004), Care Finders (08 8985 0000), DCLS (08 8982 1111) **மற்றும்** OPAN (1800 700 600) **ஆகியவையும் உங்களுக்கு கேள்விகள் இருந்தால் உதவலாம்.**

* *தொழில்முறை மொழிபெயர்ப்பாளர் மற்றும் மொழிபெயர்ப்புச் சேவைகள் உங்களுக்கும் சேவை வழங்குநருக்கும்* **இலவசமாகக்** *கிடைக்கும்.*

*இந்த வெளியீடு COTA NT ஆல் உருவாக்கப்பட்டது, சுகாதாரம் மற்றும் முதியோர் பராமரிப்புத் துறையின் நிதிப் பங்களிப்புகளால் ஆதரிக்கப்பட்டது. ஒரு திருத்தக்கூடிய பதிப்பிற்கு, PICAC மேலாளரைத் தொடர்பு கொள்ளவும்.*

COTA
NORTHERN TERRITORY
*for senior Territorians*

(08) 8941 1004
www.cotant.org.au/picac/contact-picac-nt